செய்தி வெளியீடு எண்:017 நாள் :11.01.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (11.1.2016) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. ஐசிஐசிஐ வங்கியின் முதுநிலை பொது மேலாளர் மற்றும் தென் இந்திய வணிகத் தலைவர் திரு. அமித் பால்டா அவர்கள் (ICICI Bank – Sr. General Manager & Business Head, South India – Thiru. Amit Palta) 10 கோடி ரூபாய்.

2. அசோக் லேலாண்ட் லிமிடெட் (Ashok Leyland Limited) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. வினோத் தாசரி அவர்கள் 3 கோடி ரூபாய்.

3. அமால்கமேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Amalgamations Pvt. Ltd.,) நிறுவனத்தின் தலைவர் திரு.ஏ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 2 கோடி ரூபாய்.

4. ஃபோர்டு மோட்டார் பிரைவேட் லிமிடெட் (Ford Motor Pvt. Ltd.,) நிறுவனத்தின் இயக்குநர் திரு.ஆர். ஸ்ரீகாந்த் அவர்கள் 1 கோடி ரூபாய்.

5. தென்னிந்திய திரைப்பட நடிகர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.எம். நாசர் அவர்கள் 1 கோடியே 10 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 17 கோடியே 10 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (11.1.2016) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 303 கோடியே 90 லட்சத்து 98 ஆயிரத்து 948 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 11.1.2016